**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வேடசந்தூர்**
**O.S. 269/2005**
**நாள்.13.03.2026**
**வா.சா.1- மணிமுத்து**
**த/பெ - பழனிச்சாமி**

**2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1. நான் **ஸ்ரீ** ராமபுரம் கஸ்பாவில் வசித்து வருகிறேன். தாவா சொத்துகள் **ஸ்ரீ**ராமபுரத்தில் அமைந்துள்ளது. தாவா வழக்கில் நான் 3ம் வாதி. 2ம் வாதிக்கும் சேர்த்து நான் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன்.

2. வாதிகளான கிருஷ்ணம்மாள் மற்றும் ரஞ்சிதம் ஆகியோர் பிரதிவாதியான பெருமாள்சாமியின் சகோதரிகள் என்றால் சரிதான். 1ம் வாதி கிருஷ்ணம்மாளின் மகள் தான் நளினா என்றால் சரிதான். அவர் பிரதிவாதியான பெருமாள்சாமியை திருமணம் செய்தார் என்றால் சரிதான்.

3. ஆதியில் தாவா சொத்துக்கள் முத்துச்சாமிகவுண்டருக்கு பாத்தியப்பட்டவை என்றால் சரிதான். அவருக்கு 01.11.1959ம் தேதி நடந்த பாகப்பிரிவினையின் அடிப்படையில் முத்துச்சாமிகவுண்டருக்கு பாகமாக கிடைத்தது தான் தாவா சொத்துக்கள் என்றால் சரிதான்.

4. முத்துச்சாமிகவுண்டர் காளியப்பகவுண்டர், சிலும்பாயி அம்மாள், வெள்ளைச்சாமி கவுண்டர், காளியம்மாள், நாகப்பகவுண்டர் ஆகியோரை வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டார் என்றால் சரிதான்.

5. காளியப்பகவுண்டர் மற்றும் நாகப்பகவுண்டர் ஆகியோருக்கிடையே பாகப்பிரிவினை நடந்தது என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினையின் படி B செடியூல் சொத்துக்கள் காளியப்பகவுண்டருக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான்.

6. காளியப்பகவுண்டருக்கும் நாகப்பகவுண்டருக்கும் இடையே 31.12.1971ல் பாகப்பிரிவினை நடந்தது என்றால் சரிதான். அதன்பின்னர் காளியப்பகவுண்டர்

தனிப்பட்ட முறையில் பல சொத்துக்களை கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். அவர் தன்னுடைய வருமானத்தை கொண்டு 09.07.1952 ம் தேதி ஒரு சுத்த கிரைய ஆவணம் ஏற்படுத்தியுள்ளார் என்றால் சரிதான்.

**வேண்டுகோளின்படி குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது**

*Take down by me in open court and Read over to the witness and interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct*

B.Peter Digitally signed by B.Peter

**Principal District Munsif**
**Vedasandur**